சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

O.S.No.241/2018

2020 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17-ஆம் நாள் வா.சா.2 சாட்சி திரு. சுந்தரம் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969 ம் ஆண்டு 24 வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு. P. ஈஸ்வரமூர்த்தி, B.Sc.,L.L.B., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :திரு.சுந்தரம் | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

வா.சா.2 முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாணப் வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். ஆவணங்கள் குறியீடு இல்லை.

பழனிச்சாமிக்கு மகேந்திரன் எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தின் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் அந்த வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் பக்கம் 6-ல் உள்ள சாட்சிகையொப்பம் என்னுடையதுதான். மற்றொரு சாட்சி கையொப்படும் பழனிச்சாமியின் மனைவி கையொப்பம் செய்தார்.

குறுக்கு விசாரணை

நான் செண்பகபுதூரில் வசிக்கிறேன். வாதி பழனிச்சாமி எனக்கு 10 ஆண்டுகளாக பழக்கம். வாதி பழனிச்சாமி பிக்கப்வேன் வைத்துள்ளார், வாழைக்காய் வியாபாரம் செய்து வருகிறார். ஈச்சர் வேன் வைத்துள்ளேன். நானும், பழனிச்சாமியும் எப்போது பார்த்ததாலும் ஒன்றாகதான் இருப்போம் என்றால் சரியல்ல. நான் வண்டிக்கு போகும் போது இருப்பததில்லை. வண்டிக்கு போகாத நாளில் அவருடன் இருப்பேன். நானோ, பழனிச்சாமியோ கந்துவட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. பழனிச்சாமி இடம் வாங்கியிருப்பதாக என்னிடம் சொன்னார் அதற்காக நான் பத்திரபதிவு

அலுவலகத்தில் கையொப்பம் செய்தேன். ரூ.7,50,000/- இடத்தை கிரயம் வாங்கியதாக பழனிச்சாமி சொன்னார். கிரயம் 12.10.2015-ல் நடந்தது. அந்த பத்திர எழுத்தர் பெயர் சரியாக தெரியவில்லை. கிரயம் ஆவணம் எழுதியபிறகு நானும், பழனிச்சாமியும் அடிக்கடி அந்த இடத்திற்கு போய் வந்துகொண்டிருந்தோம் என்றால் சரியல்ல பழனிச்சாமி கூப்பிட்டார் நான் போனேன். என்னை பழனிச்சாமி தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. எந்த தேதியில் நான் பழனிச்சாமி கூப்பிட்டு வழக்கு சொத்திற்கு போனேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் வழக்கு சொத்திற்கு போனபோது பழனிச்சாமி கிரயம் வாங்கிய இடத்தில் உறவினர் அங்கு குடியிருந்தார். வீட்டின் பூட்டை உடைந்திருந்தாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். அந்த பூட்டை உடைத்தது யார் என்றால் அந்த வீட்டின் குடியிருந்தவர் தான் அந்த பூட்டை உடைத்தார். அதன்பிறகு தான் நாங்கள் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். தாவா சொத்தில் பிரதிவாதி அவரது அப்பா காலத்திலிருந்து வசித்து வருகிறார் என்றாலும், பழனிச்சாமிக்கு மகேந்திரன் கடன் வாங்கி அதற்காக அடமான பத்திரம் எழுத மகேந்திரனை அழைத்துச்சென்று கிரயபத்திரம் எழுதிவாங்கிகொண்டோம் என்றால் எனக்கு தெரியாது. நானும், பழனிச்சாமியும் நண்பர் என்பதாலும், கந்துவட்டிக்கு பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்து வருகிறோம் என்றாலும், கந்துவட்டிக்கு மகேந்திரனுக்கு பணம் கொடுத்துவிட்டு அவர் சொத்தை ஏமாற்றி எழுதிவாங்கிகொண்டோம் என்றால் சரியல்ல. பூட்டை மகேந்திரன் உடைக்கவில்லை என்றாலும், அவர்தான் அந்த வீட்டில் வசித்து வருகிறார் என்றாலும், நானும், பழனிச்சாமியும் சேர்ந்து அந்த சொத்தை அபகரிக்க பொய்யான ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி மகேந்திரன் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பழனிச்சாமி மீது கந்துவட்டி புகார் கொடுத்தது எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக நாளிதழில் அறிவிப்பு வந்த விவரம் எனக்கு தெரியாது. பழனிச்சாமி அழைத்தன் பேரில் அவர் நண்பனுக்காக வேண்டி பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

ஒ/ம். திரு.சுந்தரம் PW2

ஒ/ம். P. ஈஸ்வரமூர்த்தி
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்